1989 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

ஆளுநரைச் சந்தித்து காவிரிப்பிரச்சினை குறித்துப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாக அவர் வருகிற வரையில் அங்கே தங்க வேண்டி இருந்த காரணத்தாலும் பத்திரிகைகளில் தான் இந்தச் செய்திகளை எல்லாம் நான் பார்த்தேன். நம்முடைய நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே குறிப்பிட்ட ஆவணங்களைப்பற்றி எல்லாம் பத்திரிகையிலே குறிப்பிடப்பட்டு, மிகப்பெரும் பொறுப்பிலே இருக்கிற ஒருவருடைய கையெழுத்தோடு வெளியிடப்பட்டிருக்கிறது. இது நம்முடைய அரசுக்கும் தொடர்புடையது என்ற அளவில் நம்முடைய மேதகு ஆளுநருடைய பெயரால் அவருக்கு எழுதப்பட்ட கடிதம். முன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் திரு. எம். ஜி. ஆர், அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் இவைகள் எல்லாம் பத்திரிகைகளில் பிரசுரம் ஆகி இருக்கின்றன. அது குறித்த நீண்ட நெடிய கட்டுரைகளும் வெளியாகி இருக்கின்றன. நான் இரவு தான் சென்னை திரும்பினேன். எனவே இரவோடு இரவாக அந்த ஃபைல்களை எல்லாம் தலைமைச் செயலகத்திலிருந்து பெற்று, பார்த்து, அதைப்பற்றி எதுவும் கூறுவதற்கு இயலாதவன் ஆக நான் இருக்கிறேன்; அதற்கு நேரம் இப்போது போதவில்லை என்பதைத் தெரிவித்து அந்தக் கோப்புகளை எல்லாம் நான் படித்துப் பார்த்த பிறகு இங்கே எழுப்பப்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினைக்குத் தெளிவான, சரியான விளக்கத்தை என்னால் அளிக்க முடியும்.

(ஆ) தேனிரும்புப் பற்றாக்குறையால் கோவையிலுள்ள இரும்பு பவுண்டரிகள் மூடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது குறித்து.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை நட்டமும் 500-க்கு மேற்பட்ட இரும்பு உருக்கும்படியான பவுண்டரிகள் மூடப்படக்கூடிய ஒரு அபாயமும் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்து இதற்கு முன்பும் நாம் இந்த மன்றத்தில் கிளப்பி உடனடியாக மத்திய அரசை இதன்மீது நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தவும் கோரியுள்ளோம். 30,000 டன் தேனிரும்பு நமக்குத் தேவைப்படுகிற நேரத்தில் வெறும் 3,000 டன் மட்டும் கொடுத்து இந்த 500 பவுண்டரிகளும் வேலை செய்ய முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கும்படியான இந்த நெருக்கடியான நிலைமையில் நமது அரசு உடனடியாக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அதிகப்படியான தேனிரும்பை இங்கே அனுப்பி வைக்கும்படி கோர வேண்டும். 'க்ளோஷர்' என்ற எல்லைக்கு அந்த பவுண்டரிகள் வருகின்ற நிலைமையில் 'க்ளோஷர்' ஆகாமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க நமது அரசு முன்வரவேண்டும் என்ற ஒரு தாழ்மையான வேண்டுகோளை நான் முன் வைக்க விரும்புகிறேன். இதிலே அரசினுடைய பதிலை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் திரு. ரமணி அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து சில விவரங்களை இந்த அவையில் வைக்க விரும்புகிறேன். ஏனென்றால், இது அரசுக்கும் பங்குள்ள முறையீடாக இருப்பதாலும், அரசு இது குறித்து எடுத்துள்ள நடவடிக்கைகளை மேலும் எடுக்க நான் கடமைப் பட்டுள்ளேன். 11—3—1989 அன்று, இந்தியப் பிரதமர் மாண்புமிகு ராஜிவ் காந்தி அவர்களுக்கு நான் இது குறித்து ஒரு கடிதம் எழுதியிருக்கின்றேன். கோவையிலே மாத்திரம் இந்த 'பிக் அயர்ன்' என்று சொல்லப்படுகின்ற 'தேனிரும்பு' பற்றாக் குறையின் காரணமாக, 500 தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டு 50 ஆயிரம் பேர்கள் இன்றைக்கு அவதிப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது என்று நான் அந்தக் கடிதத்திலே சுட்டிக் காட்டியிருக்கிறேன். கோவை மாவட்டத்திற்கு மாத்திரம் மாதம் ஒன்றுக்கு 9 ஆயிரம் முதல் 10 ஆயிரம் மெட்ரிக் டன் 'பிக் அயர்ன்' தேவைப்படுகின்றது. இரும்பு விநியோகிக்கும் துறை கிடங்கிலேயிருந்து மாதந்தோறும் இதுவரை 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் மெட்ரிக் டன்கள் வரை 'பிக் அயர்ன்' கொடுத்து வருகின்றார்கள். தேவைப்படும் மிச்சத்தை, இந்தத் தொழிற்சாலை வைத்திருப்பவர்கள் வெளிமார்க்கெட்டிலே வாங்கிப் பயன்படுத்தி வந்தார்கள். அண்மைக்காலத்தில் இந்த இரும்பு வகையராக்கள் மிகுந்த பற்றாக்குறையாக ஆகிவிட்டன. தொழிற்சாலைகள் இந்தப் பற்றாக்குறையால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் இரும்பு வகைகளை விநியோகிக்கும் துறை, திடீரென்று 3 மாதத்திற்கு ஒரு முறை 3 ஆயிரம் மெட்ரிக் டன்கள் மட்டுமே, அதாவது மாதம் ஒன்றுக்கு ஆயிரம் மெட்ரிக் டன்கள் மட்டுமே விநியோகிக்க இயலும் என்று தெரிவித்துவிட்டது. இதற்கு முக்கியமான காரணம், பெரிய இரும்புத் தொழிற்சாலைகள் இந்தத் தேனிரும்பை விநியோகிக்க முன்வராததுதான். சரியான முயற்சிகள் எடுக்கப்படாததால் இறக்குமதி செய்து கொடுக்கவும் முன்வரவில்லை. இந்தத் தகவல்களை எல்லாம் நான் பிரதமர் அவர்களுக்குத் தெரிவித் திருப்பதோடு, மேலும் என்னுடைய கடிதத்திலே இப்படிப்பட்ட தேனிரும்பு—'பிக் அயர்ன்' விநியோகம் செய்வது குறைக்கப் பட்டாலோ அல்லது நிறுத்தப்பட்டாலோ கோவை மாவட்டத்தில் இந்தத் தொழில் மிகவும் பாதிக்கப்படும் என்றும், அதன் காரணமாக பல்லாயிரக்கணக்கானவர் வேலை இழக்க நேரிடும் என்றும் தெரிவித்திருக்கிறேன். இவைகளைத் தடுப்பதற்காக உடனடியாக பெரிய இரும்புத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான அறிவுரைகளைக் கூறி உடனடியாக தேனிரும்பு கோவை மாவட்டத்திலே உள்ள 500-க்கு மேற்பட்ட தொழிற் சாலைகளுக்குக் கிடைக்க வழிவகை செய்து தரவேண்டும் என்று 11—3—1989 தேதிய கடிதத்தில் பிரதமர் அவர்களை நான் கேட்டுக்கொண்டேன். அது குறித்து நேற்று மாலையில் மத்திய

1989 மே 11] [டாக்டர் மு. கருணாநிதி]

அரசிடம் இருந்து ஒரு பதில் கடிதம் வந்துள்ளது. கர்நாடகாவிலே உள்ள விஸ்வேஸ்வரய்யா ஸ்டீல் என்ற மத்திய அரசின் ஸ்டீல் கம்பெனியிலுள்ள இரும்பிலிருந்து தேனிரும்பை ஒதுக்குவதாகவும், அவர்களிடம் நாமே தொடர்பு கொள்ள வேண்டியும், அந்தக் கம்பெனியிடம் ஸ்டாக் கொஞ்சம் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நம் அரசு இன்றைக்கே அந்தக் கம்பெனியோடு தொடர்பு கொண்டு இருக்கின்ற ஸ்டாக்குகளைப் பெற முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) கோ-ஆப்டெக்ஸ் சார்பில் கொடுக்கப்பட்ட விளம்பரக் காட்சிகளை முழுமையாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாதது குறித்து.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சார்பில் நடத்தப்படுகின்ற பொது நிறுவனமான கோ—ஆப்டெக்ஸ் சார்பில் விற்பனைக்காக டி. வி. -யில் விளம்பரம் கொடுக்கப்பட்டு, அரசாங்கப் பணமும் கொடுக்கப்பட்டு, பொதுமக்களுடைய பணமும் செலுத்தி, அங்கே அவர்கள் அந்த விளம்பரதாரர்கள் நிகழ்ச்சியில் நம்முடைய முதலமைச்சர், இன்னும் பல்வேறு இனங்கள் குறித்த படங்களையெல்லாம் அவர்கள் வெட்டிவிட்டு, அதையும் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் கண்டனம் தெரிவித்த பிறகு, இப்படி டி. வி. யின் போக்கை வெளிப்படுத்துகின்ற இந்த நேரத்தில் நம்முடைய தமிழக அரசின் சார்பில் எடுக்கப்பட்ட 'முழு ஷாட்' டி. வி-யில் போடுவதற்கு அரசாங்கம் வற்புறுத்துமா? வற்புறுத்த முடியவில்லை என்றால், நம்முடைய உச்ச நீதிமன்றம் காட்டிய ஒரு தீர்ப்பை—பம்பாயில் ஒரு சினிமாவைக் காட்டுவதற்கு உச்ச நீதிமன்றம் வழங்கியதே ஒரு தீர்ப்பு, அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே—அரசாங்கமே டி. வி-க்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைப் போட்டு, 'முழு ஷாட்டை'யும் மக்களுக்குக் காட்ட வேண்டும் என்று சொல்லுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

இது போன்ற நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு இந்த அவையே ஒரு கண்டனத்தைத் தெரிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன், காரணம், இந்த அவையிலேதான் நாம் ஒவ்வொரு மானியத்திற்கும் பணத்தை ஒதுக்குகிறோம். இங்கே ஒதுக்கப்பட்ட பணம், மக்களுக்கு விளம்பரமாகச் சில நேரங்களில் போகும்போது, public has a right to know. என்ன நடைபெறுகிறது என்பதை முழுமையாகத் தெரிந்து கொள்ள